Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 234

சனிக்கிழமை
19 ஜூலை 2025

ஆடி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

கல்வி மறுசீரமைப்பில்

## வரலாறும் அழகியலும் நீக்கப்படாது

பிரதமர் தெரிவிப்பு

விரிவு பக்:- 05

# சிங்களக் கட்சிகள் மூலம் தமிழருக்கு நீதி கிட்டாது!

அநுர விதிவிலக்கானவர் அல்லர்

சிறிதுங்க ஜயசூரிய வெளிப்படை



**கொழும்பு, ஜூலை 19**

**சிங்களக் கட்சிகள் மூலம், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. எனவே, உள்நாட்டுப் பொறிமுறை என்ற பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டு, சர்வதேச விசாரணை ஊடாகவே நீதி நிலைநாட்டப்பட வேண்டும் - இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.**

11

## ராஜபக்சக்களின் வழியில் தமிழக முதல்வர் ஸ்டாலின்

அமைச்சர் பிமல் விமர்சனம்



கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் மின்சாரக்கதிரை என்று புதுப்புதுக் கதைகளைக்கூறி ராஜபக்சக்கள் அரசியல் நடத்தியதுபோல, தமிழக முதல்வர் கச்சதீவு விவகாரத்தை கையிலெடுத்துள்ளார் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க விமர்சித்துள்ளார்.

11

## விபுலானந்தர் விழா இன்று கோலாகலம்

சபாநாயகர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழாவில், ஸ்ரீலங்கா நாடாளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ன கலந்து கொள்ளவுள்ளார்.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,

11

## அத்திபாரம் வெட்டும்போது வெளிப்பட்டது எறிகணை!

வத்திராயனில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் முருகன் கோயிலுக்கு அருகாமையில், நேற்றுப் பிற்பகல் வெடிக்காத நிலையில் எறிகணை

11

## சஜித்தின் திட்டங்களுக்கு முழுமையான ஆதரவு!

தயாசிறி எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 19

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித்

11

## இலங்கையர் தினக் கொண்டாட்டம்; தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வாம்!

சொல்கிறார் அமைச்சர் சுனில் செனவி

கொழும்பு, ஜூலை 19

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு, அரசியற்கைதிகள் விடுதலை ஆகியவற்றை நோக்கிய தீர்வின் ஒருபகுதியாக, 'இலங்கையர்கள் தினம்' கொண்டாட்டம் அமையும் - இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

11

## காணிகளற்ற மக்களுக்கு 'கால் ஏக்கர்' காணிகள்!

புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 19

புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள காணிகள் இல்லாத மக்களுக்கு, கால் ஏக்கர் வீதம் (4 பரப்பு) வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்

11



'அவைக்கே உண்மை விளங்குது. ஆனால் எங்கடயள் தான் இன்னும் தீர்வு தருவினம் எண்டு நம்புதுகள்'

## உடைமையில் ஐஸ்; மூன்று பேர் கைது

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 19

வவுனியா கூமாங்குளம் பகுதியில், ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று பேர்

11

வடமராட்சி – வல்லிபுரம் பகுதியில்

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர், மேலதிக சிகிச்சையின்போது

11



## யாழ்ப்பாண இளையோரின் இசைப் பயணத்துக்கு ஆதரவு

பிரபல பாடகர் ஸ்ரீனிவாஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

இசைத்துறைக்கு தென்னிந்தியாவில் உள்ளது போன்ற வாய்ப்புகள் இங்கு குறைவாகவே காணப்படுகின்றன. எனினும், இங்குள்ள பிள்ளைகள் இசைத்துறையில் மிளிர்வதற்கு என்னாலான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்று தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீனிவாஸ் தெரிவித்தார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4136
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 49 59 71 73
விசேட எழுத்து D

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1203
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 01 17 45 50

**NLB ஜய**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0162
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 2 6 4 3

**மெகா பவர்**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2242
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 04 10 37 73

**மஹஜன சம்பத**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5894
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 8 2 9 4 1 7

**தன நிதானய**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1924
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 06 15 16 68
விசேட எழுத்து E

**அத சம்பத**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0469
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 9 4 1 7

**சுப தவசக்**
திகதி 18.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0010
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 20 39 47 50

# ஆளுங்கட்சி என்பதை மறந்து நேரத்தை விழுங்கும் எம்.பி.க்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

**ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்காது, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசி நேரத்தை வீணடிக்கின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகளிடம் கேள்விகளைக் கேட்கமுடியும். ஆயினும் கேள்விகளைக் கேட்பதுடன் அவர்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும். கேள்விகளுக்குரிய பதில்கள் கிடைக்காவிட்டால் நீதிமன்றம் ஊடாகவோ அல்லது வேறு வழிகள் ஊடாகவோ பதில்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஆனால் எந்தவிதமான ஆதாரங்களும் இன்றித் தனிப்பட்ட நபர்கள் இந்த இடத்தில் இல்லாத போது கேவலமான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசுவதைக் கட்டுப்படுத்தவேண்டும்.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ச.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன் ஆகியோர் சில விடயங்களை ஒருங்கிணைப்புக் குழுவில் பேசாது நேரடியாக அரசாங்கத்துடன் பேசித் தீர்வைப் பெற்றுக்கொடுக்கமுடியும். அதைவிடுத்து இந்தச் சபையில் பேசி நேரத்தை வீணடிக்கின்றனர் - என்றார். (ஏ-26)

**சுபிரி தன சம்பத**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0602
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 7 2 1 5 8 2

**Super Ball**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2868
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 24 59 67 71

**சனிதா**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 14 28 34 39
வெற்றி வாரம் 5029

**SASIRI**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0728
வெற்றி இலக்கம் 07 12 26

**லக்ன ராசி**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
தனுசு
வெற்றி இலக்கம் 01 03 11 22
சீட்டிழுப்பு வாரம் 4580

**KAPRUKA**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கம் 04 56 65 70
வெற்றி வாரம் 2044

**அத கோடிபதி**
திகதி 18.07.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 18 26 50 51
வெற்றி வாரம் 2694

# கஞ்சாவுடன் இளைஞர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு, மூங்கிலாறில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவு மாவட்டப் பெருங்குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்றரைக் கிலோ கஞ்சாப் பொதியைக்கொண்டு சென்றபோது சந்தேக நபரான மூங்கிலாறைச் சேர்ந்த 24 வயது இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளநிலையில், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஏ-19)

# ஆட்சியைக் கவிழ்க்க முன்னர் ஒளிவிடத்திலிருந்து வாருங்கள்

## ராஜிதவின் மகனுக்கு சமந்த பதிலடி

கொழும்பு, ஜூலை 19

ஆட்சியைக் கவிழ்ப்பது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் உங்கள் தந்தை எங்கிருக்கின்றார் எனச் சொல்லுங்கள். அவ்வளவு சக்தி வாய்ந்த நபரென்றால் எதற்காக ஒளிந்து விளையாடவேண்டும். இவ்வாறு ராஜித சேனாரத்னவின் மகன் சதுர சேனாரத்னவுக்கு, அமைச்சர் சமந்த வித்யாரத்ன பதிலடி கொடுத்துள்ளார்.

தனது தந்தையைக் கைதுசெய்தாலும், செய்யாவிட்டாலும் இந்த ஆட்சியைக் கவிழ்ப்போம் என சதுர சேனாரத்ன தெரிவித்திருந்தார். அது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சட்டம் எவ்வாறு செயற்படும் என்பது எமக்குத் தெரியாது. அதில் நாம் தலையிடுவதும் கிடையாது. எனினும், கைது பயத்திலேயே ராஜித பதுங்கி இருக்கக்கூடும். சிறைச்சாலையில் இருப்பதை விடவும் ஒளிந்திருப்பது கஷ்டமாகவே இருக்கும். அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்துவிட்டு வரட்டும். சட்டம் தனது கடமையைச் செய்யும் - என்றார். (ஏ-44)

# உண்மையான எதிர்க்கட்சியாக பெரமுனவே செயற்படுகின்றது

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 19

எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தேவையில்லை. ஆனால் உண்மையான எதிர்க்கட்சிக்குரிய பணியை எமது கட்சியே முன்னெடுக்கின்றது என்று ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்களுக்காக முன்னிலையாவதற்குப் பதவி, பட்டம் தேவையில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி இல்லாத காலப்பகுதியில்கூட கூட்டு எதிரணியை உருவாக்கி எமது கட்சியே எதிரணிக்குரிய பணியை முன்னெடுத்தது. எனக்கு எதிர்க்கட்சி பதவி இல்லாவிட்டாலும், உண்மையான எதிர்க்கட்சிக்குரிய பணியை இப்போதும் நாமே முன்னெடுக்கின்றோம். தனிப்பட்ட கட்சிகளின் உள்ளகப் பிரச்சினை எமக்கு முக்கியம் இல்லை. எதிரணிகள் பலமடையவேண்டும். மக்களுக்காக அணிதிரளவேண்டும். அதற்காக அரசியல் தலைமைத்துவம் வழங்க நாம் தயார் - என்றார். (ஏ-44)

# ஊழல் ஒழிப்புப் போர்வையில் எதிரிகளை ஒழிக்கிறது அரசு

## சாணக எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

ஊழல், மோசடி ஒழிப்பு என்ற போர்வையில் அரசாங்கம் அவர்களின் அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்டுகின்றது என்று மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டி.வி. சாணக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருடர்கள் தண்டிக்கப்படுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அது அரசியல் பழிவாங்கலாக இருப்பது தான் பிரச்சினை. எனது பார்வையில் அதிக ஊழல்மிக்க அரசு இந்த அரசுதான். அதிக அளவிலான அரிசி மோசடி, உப்பு மோசடி, கொள்கலன் மோசடி எனப் பெரும் மோசடிகள் இந்த ஆட்சியில்தான் இடம்பெற்றுள்ளன. ஐந்து வருடங்கள்கூட இந்த அரசாங்கம் நடக்குமா என்பது சந்தேகமே- என்றார். (ஏ-75)

# சந்திரசேனவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 19

முன்னாள் பொருளாதார மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவின் விளக்கமறியலை ஓகஸ்ட் முதலாம் திகதி வரை நீடித்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது அரசவளங்களைத் துஷ்பிரயோகம் செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டநிலையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவால் அவர் கைதுசெய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்வி வலயத்தில் 200 ஆசிரிய வெற்றிடங்கள்

## கடமைகளைப் பொறுப்பேற்கத் தயங்கும் ஆசிரியர்கள்

முல்லைத்தீவு, ஜூலை 19

**துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 44 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு வேறு வலயங்களில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளபோதும், இதுவரை 4 ஆசிரியர்கள் மட்டுமே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்று துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய 44 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அந்த வெற்றிடங்களுக்கு வேறு வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதும், 4 ஆசிரியர்கள் மட்டுமே கடமைகளைப்பொறுப்பேற்றுள்ளனர். துணுக்காய் வலயத்தில் ஏற்கனவே 160ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தற்போது 40ஆசிரியர்கள் கடமைகளைப் பெறுப்பேற்காதநிலையில் துணுக்காய் வலயத்தில் ஆசிரியர்களின் வெற்றிடங்கள் 200ஆக உயர்ந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், கடமைகளைப் பொறுப்பேற்காத ஆசிரியர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியதுடன், திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர்கள் உள்ளீர்க்கப்படுவதாலேயே இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது என்றும், எதிர்காலத்தில் மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செ.திலகநாதன், பாடசாலைகளில் உள்ள பிரச்சினைகளுக்குக் கணக்காய்வுக்குழு மற்றும் கோப் குழு மூலமாகவே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (எ-35,246)

# ராஜிதவின் முன்பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 19

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த முன்பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கில் ராஜித, சட்டத்தரணி ஊடாக முன்பிணை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். குறித்த முன்பிணை மனுவை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மனுதாரர் சார்பான வாதங்களையும் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவின் வாதங்களையும் கவனத்திற்கொண்டதன் பின்னர்கொழும்பு பிரதம நீதிவான் லக்மாலி ஜயதுங்க முன்பிணை மனுவை நிராகரித்துள்ளார். (ச-இ)

## அரகலய நட்டஈடு

# மீளப்பெறுமாறு மனுத்தாக்கல்!

கொழும்பு, ஜூலை 19

காலிமுகத்திடலில் "கோத்தா கோ கம" போராட்டக்களத்தின் மீதான மே 9, 2022 தாக்குதலுக்குப் பிறகு வீடுகளும் உடைமைகளும் சேதமடைந்த முன்னாள் அமைச்சர் களுக்கு சட்டவிரோதமாகச் செலுத்தப்பட்ட இழப்பீட்டை மீட்டெடுக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு சமூக ஆர்வலரும் வழக்கறிஞருமான ரவிந்திரநாத் தபாரே என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு எதிர்வரும் நவம்பர் 13 திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென நீதிமன்று தெரிவித்துள்ளது. (ச-இ)



# முருங்கைக்காய் விலை சரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை திடீரெனச் சரிந்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஆயிரத்து 200 ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் நேற்று கிலோ 300 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

வடமராட்சி மற்றும் வன்னிப் பகுதி போன்ற இடங்களில் இருந்து கூடுதலான முருங்கைக்காய்கள் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலை சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-17)

# அணிதிரள்வுப் போராட்ட ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை வேண்டி அணிதிரள்வுப் போராட்டத்துக்கான ஒன்றுகூடல் நிகழ்வு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை முற்பகல்10மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

சிறைகளுக்குள் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியற்கைதிகளை நினைவுகூர்ந்தும், சிறையிலிருந்து விடுவிக்கப்படாத உறவுகளின் விடுதலை வேண்டியும் எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் யாழ். கிட்டுப் பூங்காவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனையொட்டி நடத்தப்படவுள்ள இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுச் செயற்பாட்டாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)




## விகாரையில் கள்ளக்கோழி

கள்ளனுக்குத் தேள் கொட்டினால் எப்பிடி இருக்குமோ அப்பிடித்தான் முந்தநாள் பின்னேரம் கடற்றொழில் அமைச்சருக்கும், அவரோட தையிட்டி விகாரைக்குச் சேர்ந்து போன கச்சேரிப் பெரியவருக்கும் இருந்திருக்கும். எதையும் பப்ளிக்கா எல்லாருக்கும் சொல்லிப்போட்டுச் செய்தால் அதில ஆருக்கும் ஐமிச்சம் வராது. ஆனால் ஒளிச்சு மறைச்சு, கள்ளக்கோழி பிடிக்கிறமாதிரி நைசா செய்யிறவேலையளில கட்டாயம் ஏதோ கள்ளமிருக்கும். முந்தநாள் வலிகாமம் வடக்கு பிரதேசசபையில தையிட்டி விகாரைக்கு எதிரா கேஸ் போடுறதெண்டு ஒரு தீர்மானம் எடுத்தவை. அதுக்குப் பிறகு 'அந்த விகாரைக்குள்ள அகப்பட்ட எங்கட காணிப்பக்கமா அஞ்சாறு நாள் வேலை செய்யிற ஆக்களும், வாகனங்களும் போய் வந்ததை சனங்கள் கண்டிருக்கினம். ஏதோ ஒளிச்சு மறைச்சு செய்யிறாங்கள். எதுக்கும் நாங்கள் அங்க நேர போய்ப் பார்த்தால் நல்லது' எண்டு சாருஜன் எண்ட உறுப்பினர் கோரிக்கை விட்டிருக்கிறார். வழக்குப் போடுறதெண்டால், அந்த விகாரை பற்றின ரிப்போர்ட்டும் செய்யத்தானே வேணும். அதால எல்லாரும் ஒருக்காப் போய் பாப்பமெண்டு சுவட்டம் முடிஞ்ச கையோட உறுப்பினர்மார் எல்லாரும் விகாரைப் பக்கம் போயிருக்கினம்.

அங்க போனபிறகுதான் விகாரைக்குப் பக்கத்தில புதிசா இன்னொரு கட்டம் கட்டிறதுக்கு கிடங்கெல்லாம் வெட்டி விகாராதிபதி அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிறார் எண்ட விசயம் தெரிஞ்சிருக்குது. அப்பிடிக் கட்டம் கட்டத்தான் வேலையாக்களும், வாகனங்களும் உள்ளுக்க போய் வந்திருக்கு. அதையெல்லாம் போட்டோ எடுத்துக்கொண்டு வரேக்கதான், விகாராதிபதியின்ர தங்குமிடத்தில ஆக்கள் நடமாட்டம் இருக்கெண்டு அங்கையும் போய் பார்த்திருக்கினம். அப்பதான் அங்க விகாராதிபதியோட அமைச்சரும், கச்சேரிப்பெரியவரும் ஏதோ கதைச்சுக்கொண்டிருந்ததை இந்த உறுப்பினர்மார் கண்டிருக்கினம். முந்தநாள் பகல்தான் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடந்தது. அந்தக் களைப்பு மாறமுதல் அமைச்சரும், கச்சேரிப் பெரியவரும் ஏன் விழுந்தடிச்சுக் கொண்டு விகாராதிபதியைச் சந்திக்க வந்தவை எண்டு உறுப்பினர்மாருக்கு விளங்கேலை.

இதுக்கு முதலும் அமைச்சர் வந்து விகாராதிபதியோட கதைச்சவரெண்டும், அதின்ர மிச்ச விசயம் கதைக்கத்தான் முந்தநாள் வந்தவரெண்டும் கட்சி வட்டாரங்களில சொல்லுப்படுகுது. விகாரைப் பிரச்சினையைத் தீர்க்கத்தான் அவை ரண்டுபேரும் விகாராதிபதியிட்ட போனவையெண்டால், எல்லாருக்கும் சொல்லியிருக்கலாமே. இப்பிடி முக்காடுபோட்டுக் கொண்டு போகத் தேவையில்லையே. அதோட விகாரைப் பிரச்சினை இவை ரண்டுபேரையும் விட அந்தப் பிரதேச சபை உறுப்பினர்மாருக்குத்தான் அத்துப்படி. அதால அவையையும் கூப்பிட்டு அந்த இடத்திலேயே வடிவா விகாராதிபதியோட கதைக்க விட்டிருக்கலாமே? அதை ஏன் அவை செய்யேலை? என்னவோ நடக்குது, மர்மமா இருக்குது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




MEDIA PARTNERS | DIGITAL MEDIA PARTNER | NEWSPAPER PARTNER | GIFT PARTNER | BEVERAGES PARTNER | REFRESHMENT PARTNER | TRAVELLING PARTNER

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 14. சிவன்கோவில் மேற்கு வீதி. ஆதன இல்-22/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செல்லத்துரை செல்வநாயகம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். மானிப்பாய். நவாலி கிழக்கில் வசிக்கும் கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி அவர்கள் 2005.10.03 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 1061ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம். குறித்த ஆதனமானது தனது பிதா செல்லத்துரை செல்வநாயகம் 1971ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவில் வசித்த கந்தசாமி என்பவரிடம் கொள்வனவு செய்து மூலப்பிரதியும் வைத்திருந்தார் என்றும். 1990ம் ஆண்டில் நாட்டில் நடந்த யுத்தம் காரணமாக உறுதியினை தவறவிட்டு கொழும்பு சென்றுவிட்டார் எனவும் பின்னர் எங்கு தேடியும் உறுதி கிடைக்கவில்லை என்றும் தனது பிதா கொழும்பில் வசிக்கும் பொழுது தங்கை மற்றும் கணவர் ஆகிய வைத்தியர் வைத்தியலிங்கம் ஜீவானந்தன் மனைவி ஜெயலக்ஷ்மி மறுநாமம் றஞ்ஜி முன்னிலையில் தனக்கு வாய்மொழி மூலமாக அழியா நன்கொடையாக வழங்கியிருந்தார் எனவும் தனது பிதா 1997.09.21ல் இயற்கை எய்துவிட்டார் என்றும். குறித்த இச்சாதனத்தில் ஜீவானந்தனும் மனைவி ஜெயலக்க்ஷ்மியும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளார்கள் எனவும். 1996ம் ஆண்டிலிருந்து தனது நன்கொடையும் சொந்தமும் ஆட்சியும் உரிமையும் ஆனது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. வெள்ளைச்சூரி தறை மறுபெயர் வைரவர் முன்தறை நிலப்பரப்பு ஒன்று குளி ஏழு தசம் நான்குளட்டு (நி.ப.1 கு.7.48) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.P.தனராஜா அவர்களால் 2005.10.01ல் 2834ம் இலக்க நிலஅளவைப் படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் துண்டு ஒன்று ( து.1) ஆகிய நிலப்பரப்பு ஒன்று குளி ஏழு தசம் நான்குளட்டு ஆகும்.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு - அருணாசலம் கோபாலசாமிக்குரிய ஆதனம்.

வடக்கு - அருணாசலம் கோபாலசாமிக்குரிய ஆதனமும். முத்துக்குமார் ஜெகதீசனுக்குரிய ஆதனமும்.

மேற்கு - முத்துக்குமார் ஜெகதீசனுக்குரிய ஆதனமும். ஜெகதீசன் சுஜீந்திரனுக்குரிய ஆதனமும்.

தெற்கு - பொதுப் பாதை.

இன்னும் இதனது தெற்கு எல்லையில் உள்ள பொதுப் பாதையூடாக தெற்கே சென்று பிரதான வீதியாகிய வெள்ளாந் தெரு எனும் வீதி வரையிலுமான போக்கு வரத்து செய்யும் பாதைப் பாவிப்புரித்தும் இது அடங்களும் இதைச் சேந்தவைகளும். இதனது வரி மதிப்பு இலக்கம் முப்பத்தியிரண்டு(32). வெள்ளாந் தெரு. வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம் ஆகும்.

தற்போது கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி என்னும் பெயரிற்கு மாற்றம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை**

(CS 45537) E

# கர்ப்பிணிகளுக்கு மாதாந்தக் கிளினிக்

வல்வெட்டித்துறை மற்றும் அயற்பிரதேசங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கும்வகையிலான மாதாந்தக் கிளினிக் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் உரிய சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கவுள்ளார். சிகிச்சை மற்றும் ஆலாசனைகளைப் பெறவிரும்புபவர்கள் மருத்துவமனை குடும்பநல உத்தியோகத்தருடன் 0779217767 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு தங்களின் பெயர் விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

# வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பல சரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டிற்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 years experience)
2. Administration
3. Computer billing + cashier
4. Sales assistant
5. Driver - AD licence
6. Packing - பொதியிடல்
7. Part time - 05.00 p.m - 10.00 p.m

வயது எல்லை - 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 419 5209, 077 419 5218**

# 50ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் அந்திரேஸ் இன்பநாதன்**

(ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்)



ஐம்பது ஆண்டுகள் கடந்தும்
உங்கள் நினைவுகள்
இதயங்களில் என்றும்
நிலைத்திருக்கும்.
உங்கள் வாழ்க்கை ஒரு
பாடமாக எங்கள்
வழிகாட்டியாக அமைய
உங்கள் ஆசி என்றும்
எங்களோடு இருக்கும்.

தோற்றம் 20.02.1928 | மறைவு 19.07.1975

2, இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS 3614) E

# பணியாளர்கள் தேவை

**கிளிநொச்சியில் இயங்கும் பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை**

01. கணக்காளர்/கணக்காய்வாளர் (ஆண்/பெண்)
(கணினி அறிவு அவசியம்)

02. உந்துருளி விற்பனை முகாமையாளர்
(DAVID PIERIS Motor Company இற்கு) (ஆண்/பெண்)

- கணனி அறிவு அவசியம்
- உந்துருளி சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டும்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஊக்குவிப்பு தொகை + மேலதிக கொடுப்பனவு

தொடர்புகளுக்கு:

**077 772 2305, 076 014 4481**

(CS 58889) E



# இயக்குநர் பிரபாகரன் மறைவு!

தமிழ்த் திரையுலகின் பெரும் ஆளுமையாக இருந்த இயக்குநர் வேலு பிரபாகரன் (வயது 68) உடல்நலக் குறைவு காரணமாக, நேற்றுமுன்தினம் அதிகாலை காலமானார்.

இயக்குநர், கதாசிரியர், ஒளிப்பதிவாளர், தயாரிப்பாளர், நடிகர் எனப் பல்துறை ஆளுமையாகச் செயற்பட்டுவந்த அவரின் மறைவை, அவருடைய குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

1980ஆம் ஆண்டில் வெளிவந்த 'இவர்கள் வித்தியாசமானவர்கள்' எனும் படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக தமிழ்த் திரை உலகில் அறிமுகமான வேலு பிரபாகரன் 'நாளைய மனிதன்' என்ற படத்தில் இயக்குநராக அறிமுகமாகினார். கடந்த சில தினங்களாக சுகவீனமடைந்திருந்த அவர், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலமானார். (அ-ம-110)

உ

**மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"**

**அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் -2025**

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

ஆடி மாதம் 03ம் நாள் ( 19.07.2025) சனிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 10ம் நாள் ( 26.07.2025 ) சனிக்கிழமை சப்பரம். வேட்டைத்திருவிழா (27.07.2025) ஆடி மாதம் 11ம் நாள் ஞாயிற்றுக் கிழமை தேர் ஆடி மாதம் 12ம்நாள் ( 28.07.2025) திங்கட் கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெரும். (27.07.2025) தேர்த்திருவிழா அன்று ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின்மீது ஏறி நின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினமும் காலை 10.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை. வசந்தமண்டப பூஜை, அம்பாள் வீதியுலாவும். மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம் பெறும்.

"துர்க்காபுரம்"
படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சி. நவரத்தினம் மனோன்மணி அம்மா
விழா உபயகாரர்கள்.

(CS/58091) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## இலங்கையும் மின்சக்தியும்!

2030ஆம் ஆண்டளவில், இலங்கையின் 70 வீதமான மின்கட்டமைப்புப் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை மையப்படுத்தியதாக அமையும் என்று அறிவித்திருக்கின்றார் வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி. கொழும்பில் நடைபெற்ற சர்வதேச சூரிய சக்திக் கட்டமைப்பின் ஆசிய மாநாட்டில் வைத்தே, அவர் இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றார். சர்வதேச நிகழ்வொன்றில் வைத்துத் தெரிவிக்கப்பட்டிருப்பதால், அமைச்சர் குமார ஜெயக்கொடியின் அறிவிப்பை, சர்வதேசத்துக்கான இலங்கையின் வாக்குறுதியாகவும் கருதலாம். அவ்வாறுதான் கருதப்படவும் வேண்டும்.

இலங்கைக்கும் மின்சக்திக்கும் இடையிலான போராட்டம் மிகப்பெரியது. மின்சக்திக்காக மாதாமாதம் டொலரைச் செலவிடும் 'சிந்தனை வறட்சியுடைய நாடாகவே' இலங்கை இன்றளவும் இருந்துவருகின்றது. இதன் விளைவாகவே, தெற்காசியாவில் அதிகளவான மின்கட்டணத்தை வசூலிக்கும் நாடுகளில் ஒன்றாகவும் இலங்கை காணப்படுகின்றது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமென்றால், புதைபடிம எரிபொருள்களை (திரவ எரிபொருள்களை) நம்பியிருக்காமல், சூரிய மின் சக்தி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க மின்சாரக் கலாசாரத்துக்கு நாங்கள் முன்னேறவேண்டும்.

உலகிலுள்ள பல நாடுகள் இன்று புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்கு மாறியுள்ளன. அமெரிக்காவில் ஆரம்பித்த 'புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக் கலாசாரம்', பின்னர் ஐரோப்பாவிலும் கனடா, அவுஸ்திரேலியாவிலும் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட்டு இன்று அரபு நாடுகளாலும் மத்திய கிழக்கு நாடுகளாலும் பின்பற்றத் தலைப்பட்டிருக்கின்றது. மத்திய கிழக்கு நாடுகளிலும் அரபு நாடுகளிலும் அள்ளஅள்ளக் குறையாத கச்சா எண்ணெய் நிறைந்திருக்கையில், அந்த நாடுகள்கூட 'திரவ எரிசக்தி' கொள்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறிவருகின்றன. இவ்வாறிருக்கையில், இலங்கையோ இன்னமும் திரவ எரிபொருள்களையும், நீர்மின் உற்பத்தியையும் மட்டுமே தன் மின்தேவைக்கான பிரதான கட்டமைப்புகளாகக் கொண்டுள்ளமை அபத்தமானது.

இந்தப் பிறழ்வான சிந்தனைதான் 'தெற்காசியாவில் அதிக மின்கட்டணத்தை வசூலிக்கும்நாடாக' இலங்கை மாறுவதற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்திவிட்டிருக்கின்றது. நவீனத்துவம் புகுத்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திகள் இலங்கைக்கு அவசியமானவை. அதிலும் இலங்கை போன்ற தீவு நாடுகளின் மின்தேவைக்கு இவை தவிர்க்கமுடியாதவை. இத்தகைய திட்டங்களை முன்னெடுக்கும்போது புரிதலற்ற அடிப்படையில் பொதுமக்கள் அதனை எதிர்க்கவே செய்வார்கள். அதுவே யதார்த்தம். ஆனால், நல்லதொரு தெளிவூட்டலை ஏற்படுத்தி அபிவிருத்தியை நோக்கிய பயணத்தை உறுதிப்படுத்தவேண்டியதுதான் அரசாங்கத்தின் பிரதான கடமையும் பொறுப்புமாகும். புதுப்பிக்கத்தக்க மின்சக்தி என்பது இன்று உலகளாவிய பொதுப்பிரச்சினை. பருவநிலை மாற்றம், புவியின் வெப்பக் குறைப்பு, அதிகரித்துவரும் மின்சார நுகர்வு எனப் பல்வேறுபட்ட பெரும் பிரச்சினைகளுக்கான தீர்வாகப் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியே காணப்படுகின்றது. எனவே, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், வெறுமனே வாய்ப்பேச்சுடனும் வெற்று வாக்குறுதிகளுடனும் நின்றுவிடாமல் தன் வார்த்தைக்கும் வாக்குறுதிகளுக்கும் செயல்வடிவம் கொடுக்க முன்வரவேண்டும். அதுதான் இலங்கையின் எதிர்காலமும் ஆகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

இன்னொரு மனிதனின் நம்பிக்கையை நீங்கள் எப்படி எடுத்துக்கொள்வீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.

– ஒலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்–






## புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் வரலாறு, அழகியல் பாடங்கள்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

**புதிய கல்விச் சீர்திருத்தத்தின்கீழ் வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன என்று பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய கல்விச் சீர்த்திருத்தத்தில் வரலாறு, அழகியல் பாடங்களுடன் தொழில்சார் பாடமும் கட்டாயம் கற்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தத் தேசிய வேலைத்திட்டம் குறித்த சரியான ஆய்வை மேற்கொள்ளாத சிலர், வரலாறு மற்றும் அழகியல் கல்வி நீக்கப்பட்டுவிட்டது என்று பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். குழந்தைகளின் எதிர்காலத்தை அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தவேண்டாம். பாட நிபுணர்களுடன் பல நாள்கள் கலந்துரையாடி, அனைத்து மாணவர்களிடமும் வரலாறு தொடர்பான அறிவையும், மனிதநேயம் தொடர்பான குணாதிசயங்களையும் வளர்க்க உதவும் அழகியல் கல்வியைக் கற்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையிலேயே இந்தக் கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது -என்றார். (எ-26)

## சுற்றுலாவி வன்கொடுமை பிக்கு கைது

கொழும்பு, ஜூலை 19

காலி ஹபராதுவ விகாரை ஒன்றில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் 81 வயதான பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். 41 வயதான நியூசிலாந்து நாட்டவருக்கு உணவு மற்றும் பானங்களை வழங்கி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினாரென அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ச-இ)



## இணையமோசடி பல்கலை மாணவன் கைது

கொழும்பு, ஜூலை 19

இணையவழியூடாக நபரொருவரின் வங்கிக் கணக்கிற்குள் ஊடுருவி 5 இலட்சம் ரூபா பணத்தைத் திருடினாரென பல்கலை மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ருஹுனு பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## தெஹிவளையில் துப்பாக்கிச்சூடு


கொழும்பு, ஜூலை 19

தெஹிவளை புகையிரத நிலையத்துக்கு அருகில் துப்பாக்கிச்சூடு நேற்று நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தினரெனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## போதைப்பொருளுடன் மூவர் யாழில் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் உயிர்க்கொல்லி போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய மூன்று இளைஞர்களைப் பொலிஸார் சோதனையிட்டபோதே அவர்களிடம் இருந்து 90 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. மூவரையும் கைதுசெய்த பொலிஸார் , அவர்களைக் குருநகர்ப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-20)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆடி 04
20.07.2025
சுபநேரம் : 03.01 04.31
ராகுகாலம் : 09.01- 10.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். உணவுவகைகளால் அலர்ஜி ஏற்படக்கூடும் என்பதால் கவனம் தேவை.

**இடபம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்யநேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**கடகம்:** விறுவிறுப்பாகச் செயற்படுவீர்கள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சகோதரர்கள்வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர்ப்பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்குமேல் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக் கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**துலாம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டியிருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண்விவாதங்கள் ஏற்படக் கூடும்என்பதால், பொறுமையைக்கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார்.

**தனுசு:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் இன்றைக்கு வேண்டாம். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.



# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று செருக்கல் பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தென்மராட்சி இளைஞர் சேவைகள் அதிகாரி தலைமையில் இடம்பெற்றது .

இதன்போது புதிய தலைவராக இ, சஞ்சய் கழகத்தைப் பொறுப்பேற்றார். தொடர்ந்து குறித்த கழகத்தின் ஆரம்பகாலத் தலைவராக இருந்து சாவகச்சேரி நகரசபையின் உப நகரபிதாவாகத் தெரிவுசெய்யப்பட்ட ஞா. கிஷோர், கழகத்தின் செயலாளராக இருந்து நகரசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட மு. கோகுல்ராஜ் ஆகியோர் நகர இளைஞர் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (ச-28)

# கைப்பணியும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களைத் தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் போட்டி மற்றும் கண்காட்சி என்பன ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள கைப்பணியாளர்கள் கட்டாயம் தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவுசெய்தவர்களாக இருத்தல் வேண்டும். பதிவினை மேற்கொள்ளாதவர்கள் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள வடமாகாண தொழிற்றுறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்மூலம் தங்கள் பதிவினை மேற்கொண்டு போட்டிக்கான ஆக்கங்களைத் தயார்ப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)



# மன்னார் மாவட்டத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

மன்னார், ஜூலை 19

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் மன்னார் மாவட்ட மட்டத்திலான ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் பு.டிலிசன் பயஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். (ச-41-56,60,213)

# தடகள சம்பியன்ஷிப் ஸ்கந்தா மாணவி சாதனை



யாழ்ப்பாணம், ஜூலை 19


சேர். ஜான் டால்ட் ஜீனியர் தடகள சம்பியன்ஷிப்போட்டியில் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவி பி. வைஸ்ணவி 80மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும், நீளம் பாய்தலில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். துரையப்பா விளையாட்டரங்கில்அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. (ச-41)

# அதிபர் பதவி வெற்றிடம் விண்ணப்பங்கள்கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள அதிபர் சேவை வகை 3 ஐச் சேர்ந்த குடமியன் அ.த.க. பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டிருத்தல் மற்றும் இலங்கை அதிபர் சேவை வகை 3 ஐச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். மாகாணக்கல்வி அமைச்சின் அதிபர் வெற்றிடம் நிரப்புதல் சுற்றுநிருப இல 2023/03, 2023/03ஏ இற்கு அமைவாக தெரிவு இடம்பெறும். விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப்பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடக்கு – கிழக்கின் புத்துயிர் கனடா ஆதரவு வழங்கும்!

*தே.ம. சக்தி எம்.பி.க்களிடம் கனடாத் தூதுவர் உறுதியளிப்பு*

யாழ்ப்பாணம், ஜுலை 19

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேசிய மக்கள்சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்குக் கனடாவும் ஒத்துழைப்பை வழங்கும் என அந்நாட்டுத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான கனடாத் தூதுவருக்கும், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்த ராஜா, மற்றும் இளங்குமரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம், காணிப்பிரச்சினை, வடக்கை இலக்காகக்கொண்டு அமையவுள்ள முதலீட்டு வலயங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது வடக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்குவைத்து கனடாவால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் வெற்றியளிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வழங்கப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள், தூதுவரிடம் எடுத்துரைத்தனர். (ச-26,20)

### இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த

# கடற்படையால் முடியாவிட்டால் மீனவர்களிடம் கையளியுங்கள்!

### ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜுலை 19**

**வடக்குக் கடற்பரப்பில் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கடற்படையால் கட்டுப்படுத்தமுடியாவிட்டால், அந்தப் பொறுப்புகளை ஒரு மாதத்துக்கு வடக்கு மீனவர்களிடம் ஒப்படையுங்கள் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

மன்னார், முசலிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


இந்திய இழுவைப்படகுகள் வடக்குக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களது வாழ்வாதாரங்களைச் சூறையாடிச்செல்கின்றன.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கவேண்டிய கடற்படையினரும், ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகக் காரணங்களைமாத்திரம் சொல்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு டோறாப் படகுகள் வேண்டும் என்று கடற்படையினர்காரணங்களைக்கூறிக்கொண்டிருக்கமுடியாது. இந்த விடயத்தில் கடற்படையினர்மீது மீனவ மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

படையினரால் இந்த அத்துமீறல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தமுடியவில்லையெனில் எமது மக்களிடம் அந்தப் பொறுப்பை வழங்குங்கள்.

அதேநேரம், கடற்படையினர் முள்ளிக்குளம் கிராமத்தையும் முற்றாக அபகரித்து, அந்தக் கிராம மக்கள் மீள்குடியேறுவதற்குத் தடையாக இருக்கின்றனர். எமது மக்களுடைய வீடுகளையும் கடற்படையினர் அடாத்தாகக் கைப்பற்றியுள்ளனர் என்றார். (எ-246)





## வவுனியாவில் ஆடிப்பிறப்பு விழா

வவுனியா, ஜுலை 19

ஆடிப்பிறப்பு விழா வவுனியா தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிலையடியில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாநகரசபையின் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வில் சோமசுந்தரபுலவரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன், மாநகர ஆணையாளர் வாகீசன், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க தலைவர் ரவீந்திரன், நகரசபை உத்தியோகத்தர்கள், பொது அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)

## காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி கையெழுத்துச் சேகரிப்பு



மன்னார், ஜுலை 19

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கக்கோரியும், பயங்கரவாதத்தடைச் சட்டம் உட்பட அடக்குமுறைச் சட்டங்களை இரத்துச்செய்ய வலியுறுத்தியும் சம உரிமை இயக்கத்தால் மன்னாரில் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

'சம உரிமைகளை வெல்வோம் இனவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம்' எனும் தொனிப்பொருளில் சம உரிமை இயக்கத்தால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-56)




## வறண்ட மண்டல விவசாயம் 11ஆவது சர்வதேச மாநாடு

யாழ்ப்பாணம், ஜுலை 19

வறண்ட மண்டல விவசாயம் குறித்த 11ஆவது சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாயபீடக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விவசாயப் பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா கலந்துகொண்டார்.

நியூசிலாந்து மற்றும் யப்பானிலுள்ள யுகா சசாகி யமகட்டா ஆகிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர் மஞ்சுளா குலரத்னா லிங்கன் பேச்சாளராகக் கலந்துகொண்டார். மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹிமால் ஏ. சுரவீர உட்பட ஏனைய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,13)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கவின் கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா கடந்த புதன்கிழமை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌளீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. (ச-9,66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு நடந்தது இனப்படுகொலையே

## வலி.கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**யாழ்ப்பாணம், ஜூலை 19**

**இலங்கையில் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே. அந்த இனப்படுகொலைக்கு இலங்கை அரசு காரணம் என்ற நிலையில், உள்நாட்டு விசாரணைகளில் முற்றிலும் எமது மக்களும் நாமும் நம்பிக்கை இழந்துள்ளோம். எனவே சர்வதேச நீதியேவேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

வலி. கிழக்குப் பிரதேசசபையின் இரண்டாவது அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் வரலாற்றுரீதியில் நாம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். தமிழ்ப் பெண்கள் அரச படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர். இதற்குச் செம்மணி தக்க சான்று.

இன்று மீட்கப்படும் புதைகுழிகள் மீது சர்வதேச விசாரணை அமையுமாயின் பல உண்மைகளை அவை வெளிப்படுத்தும். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் தெருக்களில் வருடக்கணக்கில் போராடிக்கொண்டு இருக்கின்றனர்.

எமது பூர்வீகத் தாயகமான வடக்குக் கிழக்கில் நிலங்கள் திட்டமிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் உண்மைகளைக் கண்டறிந்து நீதியை வழங்க போதிய பொறிமுறைகளும் ஏற்புடைமையும் இன்றைய அரசிடமும் கிடையாது. எனவே இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வைப் பெற்றுத்தரும் என வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் முன்வைத்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-20)

# மன்னாரின் வளங்களை அபகரிப்பதற்குச் சதி!

## விரைவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் அருட்தந்தை மக்காஸ் அடிகள் எச்சரிக்கை



மன்னார், ஜூலை 19

மன்னாரின் வளங்களும், மன்னார் மக்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும். அவை பாதுகாக்கப்படுவது உறுதிப்படுத்தப்படாவிடில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரின் வளங்களை அபகரிப்பதற்குச் சதிமுயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன. கனிய மணல் அகழ்வு தொடர்பாக பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏற்கனவே மன்னாரில் நிறுவப்பட்ட 30 காற்றாலைகளைத் தொடர்ந்து மேலும் 5 காற்றாலைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மக்களின் எதிர்ப்பு இந்த விடயத்தில் கண்டுகொள்ளப்படவில்லை. இது தவறான விடயமாகும். மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் செயற்படுத்தும் அதிகாரிகளின் செயற்பாடுகள் கவலைக்கு உரியன. எனவே அவர்களுக்கு நாங்கள் மேலும் ஒரு வாரகால அவகாசத்தை வழங்குகின்றோம். குறித்த வேலைத் திட்டத்தை உடனடியாக நிறுத்தி வேறு இடத்துக்குக் காற்றாலைத் திட்டத்தை மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிலங்களைப் பாதுகாக்கும் உரிமை வாழிடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு உள்ளது. அது அவர்களின் பிறப்புரிமை. எனவே அத்தகைய உரிமைகளைப் பறித்தெடுக்க முடியாது. அதை அனுமதிக்கவும் போவதில்லை - என்றார். (ம-56)

# மீட்சிக்கான என் திட்டங்களை அரசு செயற்படுத்தவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19


பொருளாதார மீட்சிக்காக நான் சிறந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன். அந்தத் திட்டத்தை அரசாங்கம் முறையாகச் செயற்படுத்தவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை அரசியல் பிரபல்யத்துக்காக மாற்றியமைத்தால் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஐக்கிய தேசியக் கட்சி பற்றியே அதிகளவில் நூல்களை வெளியிட்டுள்ளார். அதுவும் நன்மைக்கே, ஏனெனில் 75 ஆண்டுகால அரசாங்கங்களை விமர்சிப்பவர்கள் இனியேனும் இவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார். குறுகிய காலத்தில் பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளேன். இந்தத் திட்டங்களை சிறந்த முறையில் அரசாங்கம் செயற்படுத்தினால் நிலையான முன்னேற்றத்தை அடையமுடியும் - என்றார். (எ-இ)



சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் ஆடிப்பிறப்பு நிகழ்வு கல்லூரியின் முதல்வர் திருமதி. சுலபாமதி தலைமையில் கொண்டாடப்பட்டது. இதன்போது ஆடிக்கூழ் தயாரிக்கப்பட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் என அனைவருக்கும் பகிரப்பட்டது. (ச-27)



# 'உறைய மறுக்கும் காலம்' நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் கவிஞரும், கல்வியியலாளருமான சேரனின் எழுத்துகள் குறித்து 26 ஆளுமைகளின் ஆய்வுகள், பார்வைகள் அடங்கிய தொகுப்பான 'உறைய மறுக்கும் காலம்' நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையக அரங்கில் இடம்பெற்றது.

மூத்த கவிஞரும், மொழிபெயர்ப்பாளருமான சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும், விமர்சகருமான இ.இராஜேஸ்கண்ணன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும் எழுத்தாளருமான த. அஜந்தகுமார் ஆகியோரின் உரைகளும், தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த எழுத்தாளர் பவா செல்லத்துரை, திரைப்பட இயக்குநர் லெனின் பாரதி ஆகியோரின் இலக்கியம், திரைப்படம் தொடர்பான சிறப்புரைகளும், வாசகர் கலந்துரையாடலும், புத்தகக் கண்காட்சியும் நடைபெற்றன. (ச-41-66)

# காலத்துக்கு ஏற்ற மாற்றம் கட்சிகளில் மிக அவசியம்

## முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 19

**மக்கள் மாறிவிட்டனர். சமூகமும் மாறியுள்ளது. எனவே, அதற்கேற்றவகையில் கட்சிகளிலும் மாற்றம் அவசியம். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டுக்கும் இது பொருந்தும் - இவ்வாறு முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

**சஜித் பிரேமதாஸ இரு ஜனாதிபதித் தேர்தல்கள் மற்றும் இரு பொதுத்தேர்தல்களில் தோல்வி அடைந்துள்ளார். இதற்கான பொறுப்பை அவரும், அவரது கட்சி உறுப்பினர்களும் ஏற்கவேண்டும். அதேபோல ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல நான் உள்ளிட்டோரும் பொறுப்புக்கூறவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடாமல் இருந்திருந்தால் தற்போது பெரும் சக்தியாக இருந்திருக்கும். தலைமைத்துவ மாற்றம் என்பது கட்சி யாப்புக்கமைய இடம்பெறவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவி தொடர்பில் நான் கருத்துக்கூறமுடியாது. ஜனநாயகக் கட்சியென்றால் கால ஓட்டத்துக்கேற்ப மறுசீரமைப்பு அவசியம் - என்றார். (ம-44)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 . 06 . 1955 | 15 . 07 . 2025 |



## கோபலப்பிள்ளை இந்திராணி (மலர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோபலப்பிள்ளை இந்திராணி (மலர்) அவர்கள் கடந்த (15.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - கற்பகம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், கோபலப்பிள்ளை அவர்களின் ஆருயிர் மனைவியும், விஜயவனிதா (பிரான்ஸ்), விசிகரன் (பிரான்ஸ்), விஜிதா (நெதர்லாந்து), வினோஜா (கனடா), வினோத் (லண்டன்), வினோதினி (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும், சுதாகரன் (பிரான்ஸ்), கிருசியா (பிரான்ஸ்), மணிவண்ணன் (கனடா) ஆகியோரின் ஆசை மாமியாரும், சுவினா, டிலக்ஸ், டினோசன், சுறோமியா (பிரான்ஸ்), ஜெகன், ஜெனிஷா, கிருஷா, ரக்சன் (நெதர்லாந்து), நீஷா, அக்ஷயா (கனடா) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், கிஷானா, அனுஷ்கா, சால்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை அப்பம்மாவும், பிரதீபன் (பிரான்ஸ்), அஜய் (நெதர்லாந்து) ஆகியோரின் பேரனும், ஜனனி (இலங்கை), ஜெந்தோ (நெதர்லாந்து) ஆகியோரின் பேர்த்தியும், வர்ஷா (பிரான்ஸ்), ஜெபானோ, இலையா (நெதர்லாந்து), ஷர்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெதர்லாந்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
**0031 615 628 411**
**0033 651 618 320**

(CS/30312) J-1

**தகவல்:**
**பிள்ளைகள்**

# 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 01 . 1954 | 13 . 07 . 2020 |



## சிவபாதம் தனலட்சுமி

### திதி-அட்டமி

ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டு ஐந்து ஆயிற்று!
ஆனாலும் நாம் அழுகின்றோம் அம்மா அம்மாவென்று
கண்மணிகளாய் எமை ஆளாக்கி விட்டு காற்றோடு
போய்விட்டீர்களே அம்மா!
கண்களில் நிறைந்த நீருடனே - நாம் கலங்குகின்றோம்
அம்மா அம்மாவென்று பாசத்தோடும் பண்போடும் எமை
பாதுகாத்த எம் தாயே!
விண்ணிலே இருந்தாலும் எம் சந்ததிக்கு ஒளி
விளக்காய் ஒளி தந்து வழி நடத்துங்கள் அம்மா! எத்தனை
ஆண்டுகள் கடந்தாலும்
எமது மனம் உங்களை தேடிக் கொண்டே இருக்கும்
அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்...!

என்றும் நீங்காத நினைவுகளுடன் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


**தகவல்:குடும்பத்தினர்**

## ஆடிமாத இசைவேள்வி

இணுவில் அறிவாலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு அழகேசன் மைந்தர்களின் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. இணுவில் அறிவாலயத்தின் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினரான பஷன் ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையாளர் த.கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார்.
(ம-26)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 06 . 1945 | 19 . 06 . 2025 |



கடந்த 19.06.2025 வியாழக்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்ப தலைவர்

## அமரர் சின்னத்துரை சிவலோகசுந்தரம்

**திதி: விசுவாவசுவருடம், அபரபட்ஷம், அட்டமி திதி**

அவர்களின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை இன்று 19.07.2025 சனிக்கிழமை மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குருக்கள் மாவடி,**
**மிருசுவில் வடக்கு,**
**மிருசுவில்.**

**குடும்பத்தினர்**
**0779496977**

(RR 45553) E

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 05 . 1944 | 17 . 07 . 2025 |



## தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்

உசனை பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் 17.07.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்வரத்தினம் தம்பதியினரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் ராசரத்தினம், விஜயலட்சுமி, காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் விசியரட்ணம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபிராமி, அனுஷியா, ஜங்கரன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயதரன் (ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்), சாந்தகுமார், சோபிகா (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் புவஷாந் (U.K), தெனஸ்ருஜா, அஸ்வினி (U.K), அஸ்விகா (U.K), ரிஷிகேஷவன், கார்த்திகேயன், யதுஷியா ஆகியோரின் அன்பு பேரனாரும், தவனேஸ்வரி, காலஞ்சென்ற விசுவநாதன், சிவஞானசுந்தரம், சிவபாதம், கனகரத்தினம், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 45554) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுவாமி விபுலானந்தர் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழ் அமைப்பினரால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட சுவாமி விபுலானந்தர் நினைவுப்பேருரை நிகழ்வு கல்லூரி முதல்வர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் பிரதான மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது நினைவுப்பேருரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் 'உள்ளக் கமலமடி' எனும் விடயப்பொருளில் நிகழ்த்தினார். (ச-41)

# பொலிஸாரால் ரோந்துப்பணி

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குற்றச்செயல்களைத் தடுக்கும் முகமாக வீதிச் சோதனைகளைப் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

வீதியால் செல்லும் வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதோடு வாகனங்களுக்கான உரிய பத்திரங்களும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவையும் இதன்போது சரிபார்க்கப்படுகின்றன. (ச-17)



ஊரெழுக் கிளானைப்பதி பார்வதவர்த்தினி என வழங்கும் மனோன்மணி அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 12 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக நடைபெறவுள்ளது. (ச-25,66)

# புதிய கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் சகல கிளைகளிலும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் பங்குபற்றமுடியும் எனச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-25)

# ரணில் இல்லையென்றால் இலட்சம் பேர் இறந்திருப்பர்

*சமன் ரத்னபிரிய கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 19

ரணில் விக்கிரமசிங்க இல்லையென்றால் மருந்து இல்லாது உணவு இல்லாது இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் உயிரிழந்திருப்பார்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டை மீட்டெடுத்தவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. நாட்டை இந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு அவர் எவ்வளவு பாடுபட்டார் என்று எங்களுக்குத்தான் தெரியும்.

கஷ்டப்பட்டு குறுகிய காலத்துக்குள் நாட்டை நிமிர்த்தி னார். ரணில் சென்ற பாதை சரி என்பதை இந்த அரசாங்கம்கூட ஏற்றுக்கொண்டுள்ளது. முதலில் சர்வதேச நாணயநிதியத்தை எதிர்த்தது ஜே.வி.பி. இப்போது அதை ஏற்றுக்கொண்டுள்ளது. வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்புவதென்றால் சர்வதேச நாணயநிதியம்தான் ஒரே வழி என்று அவர்கள் புரிந்துகொண்டதால்தான் அப்படியே நாணயநிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தைப் பின்பற்றிவருகின்றனர் - என்றார். (ஏ-75)


# பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா

வவுனியா, ஜூலை 19

பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து ஒன்பது நாள்கள் நடைபெற்று, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இறுதித் திருப்பலியுடன் நிறைவுபெறவுள்ளது.

பக்தர்களின் நலன்கருதி, அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 . 01 . 1939 |  | 18 . 07 . 2025 |

## ஜயாத்துரை துரைசிங்கம்

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஜயாத்துரை துரைசிங்கம் அவர்கள் நேற்று (18.07.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதியினரின் மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், இளங்குமார், சிவகுமார், சதீஸ்குமார், சந்திரகுமார், நிர்மலா, மாலினி, ரஞ்சித்குமார் ஆகியோரின் அன்பு தந்தையும், விகிர்தா, நந்தினி, ரஜனி, நளாயினி, கரிகரன், மனோகரன், இராஜலட்சுமி (சுமதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், கமலாதேவி, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் மகாதேவன், மனோன்மணி, விமலாதேவி ஆகியோரின் சகோதரனும், சந்திரவதனா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சரோஜாதேவி, சிவலிங்கம், பத்மாவதி, லீலாவதி, காலஞ்சென்றவர்களான காசிநாதர், பாலச்சந்திரன் பாலசுப்பிரமணியும் - சந்திரா, பத்மகுலசீலன் - மாங்களேஸ்வரியின் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்துஜா, மதுரா, துளசி, மயூரன், சுகிர்தன், யதுஷா, துவாரகன், சஞ்சீவன், சர்மிளன், கபிலன், கஜீபன், கரிசன், அபினஜா, ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.07.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வநாயகம் வீதி.
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

# புதிய சோனகத்தெரு வடிகால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூலை 19



யாழ்ப்பாணம் 13ஆம் வட்டாரம் புதிய சோனகத் தெரு கிராமத்தின் வடிகால்கள் நீண்ட காலமாக துப்புரவுசெய்யப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டநிலையில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் தலைமையில் வடிகால்கள் துப்பரவுக்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் சக மாநகரசபை உறுப்பினர் ஆர்.எப்.றிஸ்லா மற்றும் தொழிலதிபரும் மாநகரசபைக்கான இலங்கை தமிழரசுக் கட்சியின் விகிதாசார பிரதிநிதித்துவ வேட்பாளருமான ஜனாப்.எம்.டீ.எம்.இர்பான் ஆகியோரின் வழிகாட்டலில் முன்னெடுக் கப்பட்டுள்ளன. (ச-41-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்சக்களின்...

2026ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலை முன்னிட்டு, கச்சதீவு தொடர்பான கருத்துப் பகிர்வுகள் தமிழகத்தில் உச்சம்பெற்றுள்ளன. குறிப்பாக, கச்சதீவை மீட்பது தொடர்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்து வருகின்றார். இவ்வாறான பின்னணியிலேயே, அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கச்சதீவு விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் வெளியிடும் கருத்துகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஏனெனில் தமிழகத்தில் எழும் பிரச்சினைகளை திசை திருப்புவதற்காகவே எமது கருத்துகள் பயன்படுத்தப்படலாம்.

தமிழக முதல்வருக்கு, மஹிந்த ராஜபக்சபோல் மின்சாரக் கதிரையை வைத்து அரசியல் நடத்தும் சூழ்நிலை இல்லை. எனவே, தமிழக முதல்வர் உட்பட தமிழகத் தலைவர்கள் கச்சதீவு விவகாரத்தை அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர். சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு உரியதாகவுள்ளது. இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை - என்றார். (அ-ம-44)

## விபுலானந்தர்...

யாழ்.மாவட்டச் செயலகம், அகில இலங்கை இந்துமாமன்றம், யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இந்த விழாவை நடத்தவுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஊர்தி மற்றும் நடைபவனியுடன் சுவாமி விபுலானந்தரின் திருவுருவப்படம் யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி நோக்கி எடுத்துச் செல்லப்படவுள்ளது. தொடர்ந்து கல்லூரியின் பிரதான மண்டபத்தில் முத்தமிழ் அரங்கநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இன்று மாலை 4 மணி முதல் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் இசையரங்கு நிகழ்வுகளும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் ஆய்வரங்கு நிகழ்வுகளும், நாளை மாலை 4 மணி முதல் நாடக அரங்கு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆரம்ப நிகழ்வில், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், கல்விமான்கள், சமய மற்றும் சமூக நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, விபுலானந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியம் மற்றும் ஒளிப்படக் கண்காட்சியும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புத்தகக் கண்காட்சியும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் இன்று முதல் ஒருவார காலத்துக்குத் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன. (அ-ம-66)

## சஜித்தின்...

தலைவர் பதவி தயாசிறி ஜயசேகரவுக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுவது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு சஜித் பிரேமதாஸ எனக்கு அழைப்பு விடுத்தார். நான் சுதந்திரக்கட்சியின் உறுப்பினர். அந்தக் கட்சியின் செயலாளர் பதவியை வகிக்கின்றேன். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியில் இணையும் திட்டம் இல்லை. அழைப்புவிடுத்தமைக்காக சஜித் பிரேமதாஸவுக்கு நன்றி. எதிர்க்கட்சித் தலைவராக அவர் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கப்படும் - என்றார். (அ-ம-44)

## காணிகளற்ற...

துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டார். இதன்போது, 'ஏனைய மாவட்டங்களையும் விட முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள் அற்றோரின் எண்ணிக்கை (சராசரி அளவில்) அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக புதுக்குடியிருப்புப்பிரதேசசெயலகத்தில் ஆயிரத்து 500 பேர் காணிகள் இல்லாமல் வசிக்கின்றனர்' என்று சுட்டிக்காட்டினார்.

இதையடுத்தே, புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட, திம்பிலிப் பகுதியிலுள்ள அரசகாணிகள் அளவீடு செய்யப்பட்டு காணியற்றோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி, ஒரு குடும்பத்துக்கு கால் ஏக்கர் வீதம் (4 பரப்பு) வழங்கப்படும் - என்றார். (அ,ம-246-26)

## உடைமையில்...

பண்டாரிக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸார் கூமாங்குளம் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே, மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில், வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 33 வயது இளைஞரிடம் இருந்து 3 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருளும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞரிடம் இருந்து 266 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பகுதியைச் சேர்ந்த 21வயது இளைஞரிடம் இருந்து 230 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டன. மூவருக்கும் எதிரான சட்ட நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-110)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார். புலோலி, வல்லிபுரக்குறிச்சியைச்சேர்ந்த பொன்னையா தேவராசா (வயது-71) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி மாலை பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகாமையில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அவர் பட்டாரக வாகனத்துடன் மோதுண்டார். இதில் படுகாயமடைந்த முதியவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். பின்னர், மீண்டும் பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100-26)

## யாழ்ப்பாண...

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள இசை நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீனிவாஸ் வருகை தந்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் எந்த நாட்டுக்குப் போனாலும் அங்கே ஈழத் தமிழர்கள் எனக்குத் தரும் அன்பும் ஆதரவும் மிகவும் தனித்துவமானது. அதை யாழ்ப்பாணத்திலும் நன்றாக உணரமுடிகின்றது.

தற்போது இசை மேடைகள் தாராளமாக பாடகர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி வருகின்றன. அதனால் பாடகர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதனூடாகப் பாடகர்கள் சம்பாதிக்கின்றார்கள் என்பதனைத் தாண்டி, இசை மேடைகளில் நேரடியாகப் பாடி ரசிகர்களை மகிழ்விப்பது மிகச்சிறப்பான விடயம். அந்த அனுபவத்தை யாழ்ப்பாண மக்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் திறமையான கலைஞர்கள் நிறையவே இருக்கின்றார்கள். தற்போது தென்னிந்தியத் தொலைக்காட்சிகள் ஊடாக அவர்களின் திறமைகள் வெளிப்படுகின்றன. இருந்தாலும் தென்னிந்தியாவில் உள்ள வாய்ப்புகள் வசதிகள் போன்று இங்கு இல்லை. அதனால் இசைத்துறை சார்ந்து கற்கும் இளையோருக்கு வகுப்புகள், பயற்சிகள் தொடர்பில் இங்குள்ளவர்கள் ஏற்பாடுகளைச் செய்தால் நிச்சயமாக எனது ஆதரவை வழங்குவேன் - என்றார். (அ-ம-20-26)

## இலங்கையர்...

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனம், மத பேதங்கள் இன்றி இலங்கையராக அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் கொண்டாட்டம், இலங்கையர் தினக் கொண்டாட்டம் இனி வரும் காலங்களில் வருடாவருடம் முன்னெடுக்கப்படும். இலங்கையில் முதன்முறையாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த விழா நடைபெறவுள்ளது. இந்த விழாவை எப்படி நடத்துவது என்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் இந்த விழாவுக்கான ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது என்பதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விழாவின்கீழ் நல்லிணக்கத்துக்கு உரிய வேலைத்திட்டம் உட்பட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அவை தொடர்பில் மக்களுக்கு விரைவில் தெளிவுபடுத்தப்படும். இலங்கையர் தினம்' என்ற விழாவில் பங்கேற்பதற்கு வெளிநாட்டிலுள்ளவர்களும் ஆர்வமாக உள்ளனர்.

வடக்கு மக்கள் எமக்கு வழங்கியுள்ள ஆணையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு, அரசியற்கைதிகள் விடுதலை, மொழிப் பிரச்சினைக்கு தீர்வு, நம்பிக்கையை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இவற்றை நோக்கிய பயணத்தில் ஓர் அங்கமாகவும், இலங்கையர்கள் தினம் அமையும் - என்றார். (அ-ம-44)

## சிங்களக்...

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பில் உதயனுக்கு கருத்துத் தெரிவித்த போது, அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். எனவே, செம்மணி போல மேலும் பல புதைகுழிகள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் இருக்கலாம். செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணி இடம்பெற்றாலும், அது தொடர்பான மேலதிக தகவல்களும், உண்மைகளும் மக்களைப் புதைத்ததைப் போல அரசாங்கத்தால் புதைக்கப்படலாம். 4, 5 வயதுடைய சிறார்களின் எலும்புக்கூடுகள்கூட மீட்கப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழ் மக்களை இராணுவத்தின் எப்படிக் கவனித்துள்ளனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இதற்கு எதிராக சிங்கள மக்கள் போராடவேண்டும்.

தமிழ் மக்களுக்கு உள்ளகப் பொறிமுறை ஊடாக ஒருபோதும் நீதி கிடைக்கப்போவதில்லை. 2009ஆம் ஆண்டு பெற்றோரால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், ஆன்மீகத் தலைவர்களால் படையினரிடம் கையளிக்கப்பட்ட இளைஞர்களுக்கும் என்ன நடந்தது? என்பது 16 வருடங்கள் கடந்தும் தெரியவில்லை.

கண்முன்னே கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியாத வகையில்தான் தெற்கிலுள்ள சிங்கள அரசுகள் செயற்படுகின்றன. அநுரகுமாரவின் ஆட்சிகூட தெற்கிலுள்ள சிங்கள அரசுதான். எனவே, இப்படியான ஆட்சியின்கீழ் உண்மை வெளிப்படாது. நீதி கிடைக்காது. எனவே, சர்வதேச ஒத்துழைப்பு ஊடாகவே நீதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதனால்தான், தமிழர்களுடன் இணைந்து சர்வதேச விசாரணையை ஐக்கிய சோஷலிசக் கட்சியும் வலியுறுத்துகின்றது - என்றார். (அ-ம-44)

## அத்திபாரம்...

யொன்று மீட்கப்பட்டுள்ளது. வீடொன்றை அமைப்பதற்காக, குறித்த பகுதியில் அத்திபாரக் கிடங்கு வெட்டியபோதே, அந்த எறிகணை வெளிப்பட்டுள்ளது. இதையடுத்து, சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, அந்த எறிகணை அகற்றப்பட்டுள்ளது. (அ-ம-27-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல்கள் உடன் நடத்தப்பட வேண்டும்

## ஐக்கிய சோஷலிசக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 19

வடக்கு, கிழக்கு மக்களுக்கு குறைந்தபட்ச அதிகாரங்களையேனும் உறுதிப்படுத்தும் மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய மேலும் தெரிவித்ததாவது: ஆட்சிக்கு வந்து ஆறுமாத காலப்பகுதிக்கு உள்ளாக தேசிய மக்கள் சக்திக்குப் பெரும் அடி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் பின்வாங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்தும் உண்மையான நோக்கம் இருந்தால், ஒரு வாரகாலத்துக்குள் அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்துமுடிக்க முடியும். 8, 9 வருடங்களாக மாகாணசபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. தமது பகுதியை தாமே ஆளக்கூடிய வகையில் குறைந்தபட்ட அதிகாரத்தைக்கூட வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது. ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் ஊடாக 'கைப்பாவை' ஆட்சி நடத்தப்படுகின்றது - என்றார். (ம-44)

# நெடுந்தீவில் நேற்று பிடிபட்டது முதலை

## எவ்வாறு வந்ததென மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஜுலை 19

நெடுந்தீவில் உள்ள பாழடைந்த கிணறொன்றில் இருந்து நேற்றுமாலை முதலையொன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

5 அடி நீளமுடைய அந்த முதலையை அவதானித்த பொதுமக்கள், இது தொடர்பில் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து, நெடுந்தீவு பிரதேச வன உயிரிகள் திணைக்களத்தினூடாக அந்த முதலை பிடிக்கப்பட்டது.

வன உயிரிகள் திணைக்களத்தினர் அந்த முதலையை கடலில் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, அதற்குப் பிரதேச வாசிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதையடுத்து, வன உயிரிகள் திணைக்களத்தின் கிளிநொச்சி அலுவலகம் ஊடாக அதை அப்புறப்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு எவ்வாறு முதலை வந்தது? வேறு முதலைகளும் தீவுக்குள் உள்ளனவா? என்பது தொடர்பில் பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு**

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## அறிவித்தல்

46, 50, 52, 54 பொன்னாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் ஆதன வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட குறித்த ஆதனங்கள் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு சொந்தமான ஆதனங்கள் ஆகும்.

குறித்த ஆதனங்களை எவரும் விற்பனை செய்யவோ, நன்கொடை அளிக்கவோ, வேறு எந்த விதத்திலும் பாரதீனப்படுத்தவோ முடியாது என இத்தால் அறியத்தருவதோடு அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கெதிராக தகுதி வாய்ந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

மேலும் குறித்த ஆதனங்களை குறித்த யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா, முகாமையாளர், உரிமையாளரின் அனுமதியின்றி உடமை கொள்வதும் சட்டவிரோதமானது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்க செட்டியார் பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளரும், முகாமையாளரும்.**

## பாஷாண உத்வாசன சபிண்டீகரன அழைப்பிதல்



கடந்த (10.07.2025) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

**அமரர்**

**ஸ்ரீமதி. சிவகௌரி அம்மா தியானந்தராசாக் குருக்கள்**

அவர்களின்

பாஷாண உத்வாசனக் கிரியைகள் (கல்லெடுப்பு) நாளை (20.07.2025) ஞயிற்றுக்கிழமை காலை 05.00 மணிக்கும், தொடர்ந்து நண்பகல் 10.00 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மறுநாள் (21.07.2025) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை.

தகவல் குடும்பத்தினர்

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள மருதம் உணவகத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

077 747 4498

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/ பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554

"கல்வியுலகில் கலங்கரை விளக்கு"

**NEC**

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம், யாழ்.நகரில் அனுபவம் மிக்க விசேட ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்...

**A/L 2027 கலை, வர்த்தகம்**

ஆரம்பம்: 19.07.2025 சனி காலை 08.00 AM

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 076 535 0999

**குத்தகைக்கு வழங்கப்படும்**

கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள Restaurant ஒன்று அனைத்து தளபாடங்களுடனும் குத்தகைக்கு விடப்படும்.

(Restaurant ஒன்றிற்கு தேவையான சகல உபகரணங்கள், வசதிகளும் உண்டு.)

077 088 4724, 077 122 1769

**கடைத்தொகுதி விற்பனைக்கு**

இராமநாதன் வீதியில் (பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

மேலதிக விபரங்களுக்கு:-

077 806 6086

(CS/58867) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org